பக்கங்கள் 12

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 19 வெள்ளிக்கிழமை 04.08.2023 அதிர்வு 04

## 82 வயது மாமியைக் கெடுத்த 57 வயது மருமகன் மறியலில்!

82 வயதான தனது மாமியாரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் 57 வயது மருமகன் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை 04▶

# கோர விபத்தில் ஐவர் உயிரிழப்பு

### இருவர் படுகாயம்





தம்புத்தேகம – ஹிரியகம பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் ஐவர் பலியாகியுள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு மீண்டும் வீட்டை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தவர்கள் பயணித்த வான் ஒன்றே, லொறியொன்றுடன் 04▶

# மேலும் 300 பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடு தளரும்!

### அடுத்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு

கொழும்பு, ஒகஸ்ட் 04

மேலும் சுமார் முந்நூறு பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இன்று அறிவித்துள்ளார்.

செப்டம்பர் முதல் வாரத்தில் இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். 04▶



## வைத்தியர் சடலமாக மீட்பு



வைத்தியர் ஒருவர் தூக்கில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் 04▶

## வாகன மோசடி 3 பேர் கைது!

### இருவருக்கு மறியல்



மோட்டார் சைக்கிளின் இயந்திர அடிச்சட்டகம் மற்றும் போலி ஆவணங்களைக் கொண்டு வாகன மோசடியில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 04▶

## கல்கிஸை - காங்கேசன் இடையே இன்று முதல் 'யாழ் நிலா' சேவை!



கல்கிஸை – காங்கேசன்துறைக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு ரயில் இன்று இரவு 10 மணிக்கு கல்கிஸை ரயில் நிலையத்திலிருந்து முதல் முறையாக பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே 04▶

## மோ. சைக்கிளை தீக்கிரையாக்கிய விஷமிகள்!



யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனம் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 04▶

## ஹெரோயினை அதிகப்படியாக நுகர்ந்த குருநகர் இளைஞர் மயங்கி விழுந்து சாவு

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவில் நுகர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

மின்சார உபகரண விற்பனைக்காகக் இந்த இளைஞர் யாழ்ப்பாணத்துக்குச் சென்ற நிலையில் கல்வியங்காட்டில் அவர் நேற்று உபகரணங்களை விற்பனை செய்துகொண்டிருந்தவேளை 04▶

# நிர்மாணத் துறையை உயிர்ப்பித்து தேசிய பொருளாதாரததுக்கு உதவுவோம்

## இதுவே அரசின் நோக்கம் என்கிறார் சாகல





கொழும்பு, ஓக.04

இலங்கையின் நிர்மாணத் துறைக்குப் புத்துயிரளித்துத் தேசிய பொருளாதாரத்துக்குப் பாரிய பங்களிப்பை வழங்குவதே அரசின் நோக்கமாகும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவிதுள்ளார்.

நிர்மாணக் கைத்தொழில் புத்துயிர் பெறுவதற்கான செயற்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது சாகல ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த காலங்களில் காணப்பட்ட பொருளாதார பிரச்சினைகளுக்குமுகங்கொடுத்துநிர்மாணத் துறையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசின் தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

நிர்மாணத்துறையினருக்கு அரசு வழங்க வேண்டிய மூன்று மாத நிலுவைத் தொகையை இந்த ஓகஸ்ட் மாதத்துக்குள் வழங்கக் கூடியதாக இருக்கும் என்று இதன்போது குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதில் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்–

வெளிநாட்டு உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, கடந்த கால பொருளாதார நெருக்கடியால் பாதியில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை விரைவாக மீள ஆரம்பிக்க வேண்டும். அரசின் விருப்பம் இதுவே. கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் வெற்றியுடன், இந்த நடவடிக்கைகளை துரிதமாகச் செயல்படுத்த முடியும்.– என்றார்.

இதன்படி, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு வெளிநாட்டு வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்தார்.

# முறையான பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இனி முன்பள்ளிகளை இயக்க முடியாது

## கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



கொழும்பு, ஓக.04

முறையான பயிற்சிகளை நிறைவு செய்யாத ஆசிரியர்களால் முன்பள்ளிகளை ஆரம்பிக்க எதிர்காலத்தில் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

கடுவலையிலுள்ள பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

தற்போது நாடு முழுவதும் 19 ஆயிரம் முன்பள்ளிகள் உள்ளன. அதில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் முறையான டிப்ளோமா பயிற்சியும் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் முறையான சான்றிதழ்களின் அடிப்படையில் மாத்திரமே முன்பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதிக் கப்படுவார்கள் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய அபிவிருத்தி தொடர்பில் ஆளுனர் ஆராய்வு

(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்துக்கு கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் நேற்று (03) இரவு சென்றுள்ளார்.

இதன்போது விசேட பூஜை வழிபாடுகளில் ஆளுனர் கலந்து கொண்டுள்ளதுடன் ஆலயத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது ஆலயத்தின் இராஜ கோபுர புனரமைப்பு , மற்றும் ஆலய உள் வீதி பகுதிகளில் மின்குழிழ் பொருத்தம், தீர்த்தமாடுவதற்கான உரிய இடம் ஒன்றை அமைத்தல், ஆலயத்தில் சூரிய மின்சார திட்டம், போன்ற கோரிக்கைகள் ஆலய நிர்வாகத்தால் முன்வைக்கப்படுள்ளன என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.





இதன் போதான பூசை விழுபாடுகளில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரத்தினம் , திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## யானை தாக்கியதில் வயோதிபர் உயிரிழப்பு



திருகோணமலை -கந்தளாய் பகுதியில் யானை தாக்கியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்-துள்ளார் என்று கந்தளாய் பொ-லிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் இன்று (04.08.2023) அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

யானையின் தாக்குதலால் கந்தளாய் -பேரமடுவ பகுதியில் வசித்து வரும் 64 வயதான ஆர். எம்.குணவர்தன என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டு முற்றத்திற்கு வந்த காட்டு யானையை விரட்ட முற்பட்ட போது யானை தாக்கியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# புதிய நீர்க் கட்டண அதிகரிப்பு இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

(அ.அஸ்வர்)

நிம்மதியாக நீர் அருந்துவதற்குக் கூட இருந்த நிலையை கேள்விக் குறியாக்கி விட்ட அரசு அதிகாரப் பரவலாக்கம், டிஜிட்டல் மயமாக்கம் என்று காலங்கடத்தப் பார்க்கிறது என்று பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

புதிய நீர்க் கட்டண அதிகரிப்பு தமது அன்றாட இயல்பு வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எரிவாயு, எரிபொருள், மின்சாரம் உள்ளிட்டவற்றுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டபோது எதிர்கொண்ட பிரச்சினைகளைவிட தற்போது முகங்கொடுக்க நேர்ந்துள்ள நீர்க்கட்டண அதிகரிப்பானது மிகப் பெரிய சவாலாகும்.

வாழ்க்கையின் மிக அத்தியாவசியமான நீர்ப் பாவனையை இலகுவாகச் சமாளித்துவிட முடியாது. இதனால் குடும்பங்கள், சுற்றுச்சூழல்கள் உட்பட அனைத்தும் பாதிக்கப்படும்.

பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள வறிய மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்கள் தமது அன்றாட நீர்ப் பாவனைக்கான திடீர் கட்டண அதிகரிப்பு விடயத்தில் பெரும் அவலங்களைச் சந்திக்கவேண்டியுள்ளது.



இதுவிடயமாக அரசு கூடிய கவனம் செலுத்தி அமுல்படுத்தப்பட்டுள்ள ஐம்பது சதவீத நீர்க் கட்டண அதிகரிப்பிலிருந்து விலக்களிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய நீர்க்கட்டண அதிகரிப்பு மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிம்மதியாக இருந்து நீரையாவது சுதந்திரமாக அருந்தி வந்த எமது இயல்பு வாழ்க்கையை சிதறடிக்கும் கைங்கரியங்களில் அரசு ஈடுபடக்கூடாது. அதிகாரப் பரவலாக்கம், டிஜிட்டல் மயமாக்கம் என்று சொல்லிக் கொண்டே காலங்கடத்துவதைப் போன்று இந்த விடயத்தையும் நோக்காமல் தமக்கு உரிய நிவாரணங்களை வழங்க முயற்சிக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## வாகன மோசடி...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரே கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்துள்ளார். இவ்வாறு கொள்வனவு செய்தவர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனத்தின் புத்தகத்தை மாற்றுவதற்காகச் சென்றபோது வாகனத்தின் தகவல்கள் மற்றும் இதர ஆவண விடயங்களில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள், இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறையிட்டுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வாகனத்தின் புத்தகம் போலியானது என்பது தெரியவந்தது. அத்துடன், மோட்டார் சைக்கிளின் இயந்திரக் குறியீடுகளை முச்சக்கரவண்டிக்கு மோசடியாகப் பாவித்துள்ளமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணையில், வாகனத்தை விற்பனை செய்த கிளிநொச்சி நபர் கைது செய்யப்பட்டார். இவர் ஓர் இடைத்தரகர் என்று தெரியவருகின்றது.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் மருதங்கேணியைச் சேர்ந்த பிறிதொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டதையடுத்து நல்லூரைச் சேர்ந்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஏனைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 82 வயது...

விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை பதில் நீதிவான் காந்திலதா உத்தரவிட்டுள்ளார்.

கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருந்துவத்த வாகெதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட குருந்துவத்தை பொலிஸார், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் மகள் சந்தேக நபரின் இளைய சகோதரனைத் திருமணம் செய்துள்ளார் என நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வயோதிபப் பெண் திருமணமான தனது மகளுடன் வசிக்கிறார் எனவும், யாரும் இல்லாத நேரத்தில் சந்தேக நபர் வீட்டுக்குச் சென்று துஷ்பிரயோகம் செய்தார் எனவும், இதுபற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று அவர் கூறினார் எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹெரோயினை...

மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை உயிரிழந்துள்ளார்.

அதிக ஹெரோயினை பாவித்தமையால் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்கிஸை...

கட்டுப்பாட்டு அறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

'யாழ் நிலா' என பெயரிடப்பட்டுள்ள இந்த குளிரூட்டப்பட்ட ரயில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டை மற்றும் கல்கிஸையை வந்தடையும்.

யாழ் நிலா சுற்றுலா ரயிலில் பயணம் செய்வதற்கு முதல் வகுப்பு கட்டணமாக 4,000 ரூபாவும் இரண்டாம் வகுப்புக் கட்டணமாக 3,000 ரூபாவும், மூன்றாம் வகுப்பு கட்டணமாக 2,000 ரூபாவும் அறவிடப்படும்.

இந்த குளிரூட்டப்பட்ட சொகுசு ரயில் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் தினமும் இயக்கப்படும் என்று திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மோ. சைக்கிளை...

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை இனம் தெரியாத நபர்கள் தீக்கிரையாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உரிமையாளரால், கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வைத்தியர்...

கடமையாற்றும் 42 வயதுடைய வைத்தியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெலியாய பகுதியில் அமைந்துள்ள அந்த வைத்தியரின் பிரத்தியேக வீட்டிலேயே அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணத்துக்கான காரணங்கள் கண்டறியப்படாத நிலையில், பிரேத பரிசோதனையின்போது அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கோர விபத்தில்...

மோதி இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வாகனத்தின் சாரதியான கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த மௌலானா அகமது (வயது 46), ஜைனு அஹப்துல் சாபா (வயது 46), அகமது மௌலானா (வயது 43), அப்துல் ரஹ்மான் முகமது ரசீம் (வயது 36) ஆகியோரே விபத்தில் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர.

காயமடைந்தவர்களில் மூவர் தம்புத்தேகம வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் பின்னர் உயிரிழந்தார்.

அவர்கள் பயணித்த வான் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது லொறியின் பின்பகுதியில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருணாகலிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த லொறி ஒன்று வீதியோரத்தில் நிறுத்த முற்பட்ட போது, பின்னால் வந்த வான் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் லொறியின் பின் பகுதியில் மோதியுள்ளது.

விபத்தின் போது வானில் பயணித்த 8 பேர் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த மேலும் நான்கு பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## மேலும் 300...

ஜூன் 10, 2023 அன்று 240க்கும் மேற்பட்ட பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையைத் தொடர்ந்து, ஜூலை 20, 2023 அன்று 328 பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் கடைசியாக நீக்கியது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக மார்ச் 2020 முதல் அதன் நீடித்த கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக அரசாங்கம் பல பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதித்தது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி மீதான தடை கடந்த ஆண்டு நவம்பர் வரை நீடித்தது.. அதன் பிறகு அரசாங்கம் பல பொருள்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை பகுதி பகுதியாக - படிப்படியாக - தளர்த்த நடவடிக்கை எடுத்தது.

NORTH WALL
ENGINEERING

யாழ் மண்ணில்
அனைத்து
கட்டுமான
தேவைக்கும்!!!
சேவைக்கும்!!!

நோர்த் வோல்
என்ஜினியரிங்

Nelliady, Karaveddy
Jaffna.
0777818208
0774002766

# சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஓக.04

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப் புலவர் தேர்வுகளின் பெறுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார் .

மேற்படி பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள் ளோர் விவரம் வருமாறு–

**சைவப்புலவர் பரீட்சையில்**

மூத்ததம்பி– சிவகுமாரன் (கொக்கட்டிச்சோலை), கந்தசாமி கைலைநாதன் (மானிப்பாய்) , குணசிங்கம். கந்தபாலன் (கோப்பாய் ), திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் (இணுவில்), பராபரம் துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), பிரம்மஸ்ரீ.குமார சாமி சர்மா சுவாமிநாதசர்மா (இணுவில்) ஆகியோர் சித்தி யடைந்துள்ளனர் .

**இளஞ்சைவப்புலவர் பரீட்சையில்**

மகேந்திரன் வினோக்சன் (பொலனறுவை) , அருமைநாதன் ஸதிஸ்குமார் (திருகோணமலை ), செல்வி கனகேந்திரன் யோகமனி (திரனியகல) ,செல்வி. நடராஜா தர்ஷிகா (பொலன் னறுவை) , சுதாகரன் ஸர்காந் (களுவாஞ்சிக்குடி), செல்வி அளகேந்திரன் நிலாந்தினி (மூதூர்), செல்வி பானுப்பிரியா தில்லைமணி (வட்டுக்கோட்டை) ஆகியோர் சித்தியடைந் துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓட்டோகளில் சாகசம் காட்டினர்: இரு இளைஞர்களுக்குப் பிணை



கொழும்பு, ஓக.04

ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியின் ஹட்டன் மல்லியப்பு பகுதியில் ஓட்டோகளை ஒற்றைச் சக்கரத்தில் செலுத்தி சாகசம் காட்டிய இரு இளைஞர்கள் ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளால் நேற்று (03) கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் மல்லியப்பு பகுதியில் இளைஞர்கள் குழு வொன்று ஆபத்தான முறையில் ஓட்டோகளைச் செலுத்தி அதனைக் காணொளியாக பதிவு செய்து சமூக வலைத் தளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்தக் காணொளியின் அடிப்படையில் இரு ஓட்டோக் களின் பதிவு எண்கள் மூலம் விசாரணை நடத்தி சந்தே கத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் 20-30 வயதுடைய ஹட்டன் பகுதியில் வசிப்பவர்கள் எனவும், நீண்ட விசாரணைகளின் பின்னர் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

முச்சக்கர வண்டிகளை ஆபத்தான முறையில் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராக ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பழைய சரித்திரம்?

சரித்திரம் மீண்டும் திரும்புகின்றது.

ஆங்கிலேயே காலனித்துவ ஆட்சி அதிகாரத்திலிருந்து இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 1948 ஆம் ஆண்டு தொடக்கமே இந்த நாட்டில் தமிழின விரோத அழிப்பு நடவடிக்கைகள் தேச - தேசிய - கொள்கைகளாக செயலுருப் பெற்றன. அரசியல் அதிகாரம் ஆங்கிலேயரிடமிருந்து பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறியமையை அடுத்து, பேரினவாதம் மேலாண்மை பெற்றது. தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறை குரூரமான - கொடூரமான - குரோதமான - வன்முறை வடிவம் எடுத்தது.

சுதந்திர இலங்கையின் கடந்த 75 வருடங்களில் - முக்கால் நூற்றாண்டு காலத்தில் - ஆட்சி பீடம் ஏறிய சகல சிங்கள அரசுகளும் இந்தத் தமிழின ஒழிப்பு திட்டத்தையே தங்களின் பிரதான கொள்கைப் போக்காகக் கடைப்பிடித்தன் கடைப்பிடிக்கின்றன.

சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறுபேறாகப் பிறப்பெடுத்த தமிழ் தேசிய உணர்வெழுச்சிக்கு முதலில் நிறுவன வடிவம் அமைத்துக் கொடுத்தது இலங்கைத் தமிழரசுக் கட்சியே.

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் தேசிய இயக்கமாகவும், கட்டமைப்பாகவும் முகிழ்ந்து உருவெடுத்த தமிழரசுக் கட்சி, முற்போக்கு சிந்தனைத் தளத்தையும் மக்களாட்சி பண்புகளையும், ஜனநாயகக் கட்டமைப்பையும் தன்னகத்தே கொண்டிருந்தமையால் அது தோற்றம் பெற்ற காலத்திலேயே தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றது. வெவ்வேறு தர மக்களையும், சாதிகளையும், வர்க்கத்தினரையும், பிரிவினரையும் தமிழ் தேசியம் என்ற கட்டுறுதியில் ஒன்றிணைத்தமை மூலம் அது ஒரு வலுவான கட்டமைப்பாகவும் மிளிர்ந்தது.

ஐம்பதுகளில் பேரெழுச்சி பெற்ற தமிழரசுக் கட்சி நடைமுறைச் சாத்தியமான ஒரு வேலை திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்தும் அதற்கு செயலுருக் கொடுக்கத் தவறியது.

அன்றைய தமிழ் தலைவர்களிடையே நிலவிய கருத்து வேற்றுமைகள், போட்டி - பூசல்கள், அத்தோடு அரசாட்சியில் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு மூன்றாம் தர நிலையில் நடத்தப்பட்டமை, தமிழின அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் அஹிம்சை ரீதியான துணிச்சல் கூட இல்லாத வறட்டுத்தனம் போன்றவை தமிழ்த் தலைவர்கள் மீது தமிழ் மக்களுக்கு - குறிப்பாக இளைஞர்களுக்கு - கடும் ஆத்திரத்தைக் கிளப்பியது. பேராபத்துக்குள்ளாகி இருக்கும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடைமுறைச் செயல்திட்டதை அன்றைய தமிழ்த் தலைவர்களினால் முன்னெடுக்க முடியவில்லை.

தெளிவான அரசியல் தரிசனமும், உருப்படியான செயல்திட்டமும், அர்ப்பணிக்கும் ஆற்றலும் இல்லாத காரணத்தினால் தமிழ்த் தலைவர்கள் மீது தீவிரவாத தமிழ் இளம் சமுதாயம் நம்பிக்கை இழந்தது.

அதன் விளைவையே எண்பதுகள் முதல் மிலேனியத்தின் முதல் தசாப்தம் வரை சுமார் 30 ஆண்டுகளாக நாம் பட்டறிந்தோம்.

தமிழ்த் தலைமைகள் மீது எண்பதுகளில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அதே அதிருப்தி - ஆட்சேபம் - ஆவேசம் - மீண்டும் கிளம்புவது வெளிப்படை.

சரித்திரம் மீண்டும் திரும்புகின்றதோ?

# தமிழர்களின் அரசியல் உரிமைகளை கைநழுவ விட்டது தமிழ் கூட்டமைப்பு

## காமினி லொகுகே குற்றஞ்சாட்டு



கொழும்பு, ஓக.02

தமிழர்களுக்குக் கிட்டிய அரசியல் உரிமைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைநழுவ விட்டது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்காமினிலொகுகே குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அப்பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தினார்.

ஆனால், அந்த உரிமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாதுகாத்துக்கொள்ளவில்லை.- என்று அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண் பார்க்கச் சென்ற இளைஞனிடம் நூதன முறையில் பறிக்கப்பட்ட பணம்

## பொலிஸில் முறைப்பாடு: பெண் கைது!

திருமணத்துக்குப் பெண் பார்க்கச் சென்ற இளைஞனை நூதன முறையில் ஏமாற்றி 18 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பளையை சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் உள்ள பெண் ஒருவரை திருமணம் செய்து கொள்வதற்கு பெண் பார்க்க சென்றுள்ளார்.

இளைஞன்பெண்பார்த்து சென்ற சில நாட்களில், இளைஞனின் தொலைபேசிக்கு அழைப்பு ஏற்படுத்திய நபர் ஒருவர், தான் ஆஸ்ரேலியாவில் இருந்து கதைப்பதாகவும், தன்னை குறித்த பெண்ணின் சகோதரர் எனவும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

எனது தங்கை வெளிநாட்டு மாப்பிள்ளையை எதிர்பார்க்கிறார். அதனால் உங்களை நான் வெளிநாட்டுக்கு எடுத்து விட முயற்சிக்கிறேன் அதற்காக 18 லட்சம் ரூபா பணத்தை வைப்பிலிடுங்கள் என்று ஒரு கணக்கிலக்கத்தை வழங்கியுள்ளார்.

இளைஞனும் அவரின் பேச்சை நம்பி பணத்தை வைப்பிலிட்டுள்ளார். சில மாதங்கள் கடந்த நிலையிலும் தனது வெளிநாட்டு அலுவல்கள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் சுதாகரித்துக்கொண்ட இளைஞன், ஆவுஸ்ரேலிய நபருடன் தொடர்பு கொண்டு, முரண்பட்ட போது, அவர் தொடர்பை துண்டித்துக் கொண்டார்.

அதன் பின்னர் அந்த தொலைபேசி இலக்கமும் செயலிழந்தது.

அதனால் இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இளைஞன் காசை வைப்பிலிட்ட கணக்கிலக்க உரிமையாளரான கிளிநொச்சியை சேர்ந்த பெண்ணை கைது செய்தனர்.

குறித்த கணக்கு இலக்கத்துக்குப் பல தடவைகள் லட்ச ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த போது, இவ்வாறாக வடமராட்சி பகுதியில் உள்ள இளைஞனையும் ஏமாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரப் பங்களியுங்கள்!

## இலங்கை பெண் எம்.பிக்கள் ஒன்றியம் நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கை சமூகத்திடம் கோரிக்கை



இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பங்களியுங்கள்என்றுஇலங்கைபெண்நாடாளு மன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கை சமூகத்திடம் கோரிக்கை விடுத்தது.

நியூசிலாந்துக்கு ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கை பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், நியூசிலாந்தில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரைச் சந்தித்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய இலங்கை பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவ சுதர்ஷனி பெர்னாந்துபுள்ளே குறிப்பிடுகையில்,

தாய்நாடு தற்போது எதிர்நோக்கி வரும் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட ஆதரவு வழங்க வேண்டும். எமது ஒன்றியம் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், உறுப்பினர்கள் அனைவரும் பொதுவான இலக்குகளுக்காக ஒன்றுபட்டு நிற்கிறார்கள்.-என்றார்.

இந்த நிகழ்வில் நியூசிலாந்து நாடாளு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை வம்சாவளியை சேர்ந்த திருமதி வனுஷி வோல்டர்ஸும் கலந்து கொண்டார். இந்தப் பயணததுக்கு நியூசிலாந்தை தெரிவு செய்தமை குறித்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

நியூசிலாந்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்குச் சாதகமான கட்டமைப்புகள் மற்றும் அதற்கான இடங்களைக் கொண்டதாகப் நாடாளு மன்ற முறைமை உள்ளது.

அந்த நாட்டில் பெண்களின் அரசியல் செயற்பாடுகளை நன்கு புரிந்து கொள்வதன் மூலமும் இலங்கையின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதிலுள்ள நல்ல நடைமுறைகளைப் பின்பற்ற முடியும் என்று வோல்டர்ஸ் இதன்போது தெரிவித்தார்.

ஒன்றியத்தின் உறுப்பினர்களான சீதா அரம்பேபொல, ரோஹினீ குமாரி விஜேரத்ன, சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி, கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, சட்டத்தரணி தலதா அதுகோரல, கோகிலா குணவர்தன, முதிதா பிரிஸான்தி, ராஜிகா விக்கிரமசிங்ஹ, மஞ்சுளா திசாநாயக, கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோரும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிப் பணிப்பாளர் நிர்வாகம் இந்திரா திசாநாயக, நாடாளுமன்ற ஊடக முகாமையாளர் நிம்மி ஹாத்தியல் தெனிய உள்ளிட்டோரும் இதன் போது கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் இந்த ஆய்வுப் பயணம் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் முழுமையான அனுசரணையில் தேசிய ஜனநாயக நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் உற்பத்திக்குப் பெறுமதி சேர்க்கும் ஈ-குருவி நடை பயணம் யாழ்ப்பாணத்தில்

உள்ளூர் உற்பத்திகளைப் பெறுமதி சேர்க்கை ஊடாக மதிப்பு கூட்டும் வகையிலான விழிப்புணர்வைச் சமூக மட்டத்தில் உருவாக்கும் வகையில் ஈ-குருவி நடை 2023 ஒழுங்கமைக்கப்படுகின்றது.

இந்தத் துடிப்பான சமூக முன் முயற்சியானது உடல் உள ஆரோக்கியத்தை மேம்மடுத்த ஒவ்வொரு நாளும் நாளும் 10,000 காலடிகள் நடப்பதை விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் மதிப்பு கூட்டுவதற்கான ஆதரவை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நடைப் பயணமானது 06 ஆம் திகதி காலை 6.30 மணிமுதல் 9.30 மணிவரை நடைபெறும். யாழ்ப்பாண பொதுநூலக முன்றலில் ஆரம்பிக்கும் நடை பயணமானது வைத்தியசாலை வீதியூடாக சத்திர சந்தியை அடைந்து, அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொது நூலகத்தை வந்தடையும்.

ஈ-குருவி நடையானது கடந்த 2020ஆம் ஆண்டுமுதல் கனடா மற்றும் இலங்கையில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வை மேற்கொள்ளும் நடையாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

இந்த நடைபயணத்தில் இணை-வதன் மூலம் நடைப்பயிற்சி மூலம் உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்து முகமாகவும் , அதேநேரம் உள்ளூர் பொருளாதாராத்தின் மதிப்புக் கூட்டலை ஆதரிப்பதனூடாக எங்கள் பொருண்மிய மேம்பாடடை வலுப்படுத்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியின் 25 ஆம் தொகுதி ஆசிரியப் பயிலுனர்களால் பறையின் மேன்மையை பறைசாற்றும் முகமாக 'பறை' எனும் குறுந்திரைப்படமானது 2023 ஜுலை மாதம் 12ஆம் திகதி வெளியிடப்பட்டது. அன்றைய தினம் 60 வருட காலத்தை பறையின் பயணத்துக்காக அர்ப்பணித்த கொட்டகலை டிரைக்கிளின் தோட்டத்தைச் சேர்ந்த அருணாச்சலம் சுந்தரம் ஐயா வரவழைக்கப்பட்டு, கல்லூரியின் உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியப் பயிலுனர்கள் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார்.

## நட்சத்திர விடுதி ஒன்றின் 'லிப்ட் 'திடீரென பழுது

தலவத்துகொடையில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றின் 'லிப்ட்' திடீரென பழுதடைந்ததால், அதில் பயணம் செய்த சுமார் 10 பேர் சிக்கி உயிர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

திருமண நிகழ்வுக்குச் சென்ற நிலையில் 'லிப்ட்'க்குள் சிக்கியிருந்தவர்கள் கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் வெளியேற முடியாமல் போயிருந்தது. இதன்போது தங்கள் உயிரை காப்பாற்றுமாறு அவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

இறுதியில், காப்பாற்றும் முயற்சியின் நடுவில் 'லிப்ட்' இடிந்து விழுந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அதில் இருந்தவர்களுக்கு விபரீதம் எதுவும் ஏற்படவில்லை.

'லிப்ட்' பராமரிப்பு இல்லாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று லிப்ட்டில் இருந்தவர்கள் கூறுகின்றனர். ஆனால், அங்கு அதிகமானோர் பயணம் செய்ததால் இது நடந்ததாக ஹோட்டல் நிர்வாகம் கூறுகிறது.

இந்த ஹோட்டலில் நேற்று இரண்டு திருமண நிகழ்வுகள் நடந்தன. அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் லிப்ட்டில் சென்றதாக கூறப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த லிப்ட் செயலிழந்ததாகவும், அது கீழே விழவில்லை எனவும் ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# கல்முனைப் பாடசாலைகளின அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு

## பாகிஸ்தான தூதுவர் கொழும்பில் வைத்துத் தெரிவிப்பு

**(ஏ.எஸ்.மௌலானா)**

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் உமர் பாறுக் புர்கி தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் புதல்வியும் சமூக செயற்பாட்டாளருமான மரியம் மன்சூர் நளீமூதீனிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பாகிஸ்தான் துதரகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்முனைப் பிராந்தியத்தின் பல தேவைகள் குறித்தும் அங்குள்ள பாடசாலைகளின் அவசரத் தேவைகள், குறைபாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் இப்பகுதி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் சட்டத்தரணி மரியம் மன்சூர், இதன்போது பாகிஸ்தான் தூதுவரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

இதையடுத்து கல்முனையிலுள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம் உள்ளிட்ட சில பாடசாலைகளுக்கு கணினித் தொகுதிகளையும் விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்கான உபகரணங்களையும் அவசரமாக வழங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நீண்ட பல வேலைத் திட்டங்களைச் செய்வதற்கு உதவுவதாகவும் உயர்ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார்.

இந்தப் பாடசாலையும் அது அமைந்



துள்ள நகரமும் பாகிஸ்தான் நாட்டின் தலைநகரின் நாமத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பதையிட்டு உயர்ஸ்தானிகர் இதன்போது மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது பரஸ்பரம் நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொள்ளப்பட்டன. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல், சமூக, கல்வி, கலாசார, பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



# இனிவரும் காலங்களில் யாத்திரைகள் தொடருமா?

## இரு உயிர்களைக் காவு கொண்ட கதிர்காம பாத யாத்திரை

**(வடிவேல் டினேஸ்)**

வருடா வருடம் இடம் பெறும் கதிர்காம கந்தன் ஆலயத்தின் உற்சவமானது இந்த முறையும் (2023) சிறப்பான முறையில் ஜுன் மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்பமாகி ஜுலை மாதம் 04 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

கொடியேற்றமானது கதிர்காமம். ஆலய வளாகத்தில் அமையப் பெற்றுள்ள இஸ்லாமிய பள்ளிவாசலில் இடம் பெறுவதுடன் மாணிக்க கங்கையில் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

இந்தியாவில் இருந்து இலங்கை வந்த முத்துலிங்க சுவாமிகளின் ஓலைச் சுவடிகள் இங்குதான் பாதுகாக்கப்படுகின்றதுடன் கதிர்காம் சிவன் ஆலயத்தில் முத்துலிங்க சுவாமிகளின் ஜீவசமாதி அமையப் பெற்றுள்ளதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குப் பாத யாத்திரை செல்வது இந்துக்களின் வழக்கம்.

கடந்த வருடங்களில் மலையகத்தில் இருந்தும் கதிர்காம கந்தனை நோக்கி பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் பாதயாத்திரையின் போது பல அற்புதங்களும் மர்மங்களும் நிகழ்வதுடன் பக்தி என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில் பாதயாத்திரை அமைந்து காணப்படும்.

முன்கூட்டியே பாதயாத்திரை செல்பவர்கள் தமக்கு பின்னர் வருபவர்கள் வழியை அடையாளம் காணும் பொருட்டு மரக் கொப்புகளை முறுத்துப் போட்டுச் செல்வர் .

அவை பாதையை அடையாளம் கண்டு பின் செல்பவர்கள் பயணத்தை தொடர்வர்.

அத்துடன் பாதை மாறியவர்களுக்கு வயோதிபர் உருவத்திலும், சிறுவர் சிறுமியர் உருவத்திலும் முருகப் பெருமான் தோன்றி சரியான பாதையைக் காண்பித்த பின்னர் மறைந்த அற்புத நிகழ்வுகள் கடந்த கால பாத யாத்திரையின் போது இடம் பெற்ற அற்புதங்களாக இன்றுவரை பேசப்படுகின்றன.

ஆனால் இப்போது செல்லும் பாதயாத்திரியர்கள் உண்மையில் பக்தியுடன் செல்கின்றார்கள்ளா ? என்பது கேள்விக்குறியான விடயமாகப் பார்க்கப் படுகிறது.

வயது முதிர்ந்த பருவத்தினரை விட இளம் வயதினர் தற்போது அதிகம் பாத யாத்திரை செல்வதுடன் பக்தி என்ற பெயரில் மகிழ்வாக நாள்களை கழிக்கும் ஒரு நிகழ்வாக இதனை இளம் சமுதாயம் மாற்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பாதயாத்திரியர்கள் எதுவித பாதுகாப்பும் இன்றி பாதுகாப்பாக பாதயாத்திரை சென்று வந்துள்ளனர்.

ஆனால் இப்போது பாதுகாப்பு என்பது கோள்விக்குறியாகியுள்ள வண்ணம் இந்முறை 2023 ஆம் ஆண்டு பாத யாத்திரையின் போது யானை மற்றும் பாம்பு தாக்குதலால் இரு உயிர்கள் பலியாகிய சம்பவம் பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது.

பாதயாத்திரிரை எப்படியும் சுமார் 100 வருடங்களுக்கு மேலான வரலாற்றை கொண்டமைந்த ஒன்றாக காணப்படுகின்றது.

இதன் வரலாற்றில் உயிரிழப்பு என்பது இதுவே முதன் முறையாக இடம் பெறுள்ளது.

யானை தாக்குதலுக்குள்ளாகி ஒரு பெண்ணும் பாம்பு தீண்டலுக்கு உள்ளாகி ஒரு ஆணும் உயிரிழந்துள்ள சம்பவம் இம் மாதம் குமண, யால பகுதியில் பதிவாகியுள்ளது.

இதனால் எதிர்வரும் காலங்களில் பாதயாத்திரியர்கள் மிக அவதானத்துடன் பாதயாத்திரை மேற்கொள்வது அவசியமாகும்.

லாகுகலை பிரதேச சபை எல்லைக் குட்பட்ட உகந்தை பகுதியில் இருந்து பிரதான காட்டுப்பாதை பயணம் ஆரம்பிக்கின்றது.

காட்டுப்பாதை ஊடாக பல பகுதிகளை கடந்து யாத்திரை செல்வோர் கதிர்காமத்தைச் சென்றடைகின்றனர்.

உகந்தை , வாகூரவெட்டை, குமுக்கன், நாவலடிமடு, வியாழை அறு, வள்ளியம்மன் ஆறு, கட்டகாமம் ( கதிரமலை கண்ட இடம்) போன்ற வனப்பகுதிகளை கடந்து கதிர்காமம் சென்றடைவர்.

வழக்கமாக உகந்தை மலை முருகன் ஆலய கொடியேற்றத்துடன் கொடியேற்றம் பார்த்து விட்டு மக்கள் காட்டுப்பாதை வழியாக கதிர்காமம் நடந்தால் ஆபத்து நேராது என்பது ஐதீகமாக காணப்பட்டது அவ்வாறு மக்கள் சென்றபோது ஆபத்துக்ஙளும் அவர்களை சூழவில்லை.

உகந்தை கொடியேற்றம் இடம் பெறாமல் 2023 இம் முறை கதிர்காம பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு உயிர்களை காவு கொண்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான துயர சம்பவம் இடம் பெறாமல் இருக்க முருகன் அருள்பாலிக்க வேண்டும்.

# நலன்புரி நன்மைகள் தேவைப்படுவோரை நெருக்கடியிலிருந்து மீட்கவே 'அஸ்வெசும'

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 04

'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டமானது சமுர்த்தி வேலைத் திட்டத்தையோ அல்லது சமுர்த்தி வங்கிகளையோ இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம் அல்ல. சமூக நலன்புரி நன்மைகள் தேவைப்படுபவர்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதை இலக்காகக் கொண்ட முறையான வேலைத் திட்டமாகும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது சமுர்த்திப் கொடுப்பனவு பெற்று வரும் 393,094 குடும்பங்களுக்கு மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை தொடர்ந்து சமுர்த்திக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

'அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளையும், ஆட்சேபனைகளையும் மீள் பரிசீலனை செய்த பின்னர் 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

# நினைவேந்தலும் நினைவுப் பேருரையும்

யாழ்ப்பாணம்,ஓக.04

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், அமரர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனின் நினைவேந்தலும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் நாளை சனிக்கிழமை மாலை 3.30மணிக்கு அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நினைவுப் பேருரையை, 'ஊடகப் பெருவெளியில் செயற்கை நுண்ணறிவு' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் வழங்க உள்ளார்.

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சு: ஆதரவளிக்கும் அமெரிக்கா!



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேரடி பேச்சுவார்த்தையை ஆதரிக்கிறோம் என அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் வொஷிங்டனில் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், நாங்கள் நீண்ட காலமாக கூறியது போல், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேரடி பேச்சுவார்த்தையை நாங்கள் ஆதரிக்கிறோம். அதுவே நீண்டகாலமாக எங்களின் நிலைப்பாடு எனவும் கூறியுள்ளார்.

அனைத்து தீவிரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம் என பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கடந்த இரு தினங்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

## ராகுல் காந்தியின் தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை!



பிரதமர் மோடி பெயர் அவதூறு வழக்கில் காங்கிரஸின் முக்கியத்தலைவர் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மோடி பெயர் குறித்து அவதூறாகப் பேசிய வழக்கில் சூரத் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ராகுல் காந்தியின் கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் கடந்த 7 ஆம் திகதி நிராகரித்தது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தார். அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று மீண்டும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர். கவாய், பி.எஸ்.நரசிம்ஹா மற்றும் சஞ்சய் குமார் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டைனைக்கு இடைக்கால தடை விதித்துள்ளது.

## அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்தி வைப்பு!



தூத்துக்குடி தி.மு.க அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் தங்களையும் இணைக்கக் கோரி அமுலாக்கத் துறை தொடர்ந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 23 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராக அனிதா ராதாகிருஷ்ணன் பதவி வகித்தார்.

இவர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக குற்றம் சுமத்தப்பட்டு தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறையினரால் 2006ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மீதான சொத்து குவிப்பு வழக்கு கடந்த 19ஆம் திகதி தூத்துக்குடி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கு இன்று தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத் தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவிருந்த நிலையில் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது,

## ஹரியானா மாநிலத்தில் 144 தடை உத்தரவுகள்!



ஹரியானா மாநிலம் நூ மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த விஸ்வ இந்து பரிஷத் ஊர்வலத்தில் சிலர் கல் வீசி தாக்குதல் நடத்தியிருந்தனர்

அதைத் தொடர்ந்து இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலில் வன்முறை வெடித்தது இதன்போது வாகனங்கள், கடைகளுக்கு தீ வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மாநிலத்தில் 5 மாவட்டங்களில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, இணையதள சேவை முடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுக்கு ஏவுகணைகளை வழங்கும் செய்தியை முற்றாக மறுக்கிறது ஜேர்மன்



உக்ரைனுக்கு நீண்ட தூர இலக்குகளை தாக்கி அழிக்க கூடிய ஏவுகணைகளை ஜேர்மன் வழங்கவுள்ளது என வெளியான தகவலை ஜேர்மன் மறுத்துள்ளது.

இந்த நிலையில் நீண்ட தூர இலக்குகளை தாக்கி அழிக்க கூடிய ஏவுகணை தொடர்பாக ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ் கருத்து தெரிவிக்கையில்,

உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணை வழங்குவது தற்போதைக்கு எங்களுக்கு முதல் முக்கியத்துவமானது என்று நாங்கள் நம்பவில்லை.

அத்துடன் இதனை உக்ரைனுக்கு நாங்கள் வழங்க மறுக்கவில்லை. எங்களுடைய கூட்டாளி அமெரிக்காவும் உக்ரைனுக்கு நீண்ட தூர கப்பல் ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தங்கள் ஏவுகணைகள் சிறப்பு வரம்புகளை கொண்டுள்ளது என்றும் போரிஸ் பிஸ்டோரியஸ் தெரிவித்துள்ளார்.

## விசா முடிந்தும் பிரித்தானியாவில் தங்கும் வெளிநாட்டவர்கள்!

பிரித்தானியாவிற்குள் பலர் தங்கள் விசா காலாவதியாகியும் தங்கிவிடுகின்றனர் என அதிர்ச்சி தகவலொன்று வெளியாகியுள்ளது.

மாணவர் விசாவில் பிரித்தானியாவுக்கு வந்து, தங்கள் விசா காலாவதியான நிலையில் பிரித்தானியாவிலேயே தங்கியுள்ள சிலரை பிரித்தானிய ஊடகமொன்று பேட்டி கண்டுள்ளது.

இதன்போது குறித்த ஊடகத்தில் பிரித்தானியாவிலேயே தங்கியவர்கள் சிலர் அந்த ஊடகவியலாளரிடம் விளக்கமளித்துள்ளனர்.

இவ்வாறு வந்தவர்களிடம் தகுந்த ஆவணங்கள் இல்லாத காரணமத்தினால் சிறிய வேலைகள் செய்து பிழைப்பு நடத்திவருவதாகவும், அவர்கள் செய்யும் வேலைக்கு ஊதியம் கொடுக்கப்படுவதில்லை எனவும், அதற்கு பதிலாக வேலை பார்க்கும் வீட்டில் தனக்கு பழைய உடைகள்,உணவு தருகின்றனர் என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரித்தானியா சட்டத்தினை பொறுத்தவரை பிரித்தானியாவில், புலம்பெயர்தல் அமைப்பு நிலை குலைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், சிலர் தங்கள் விசா காலா வதியான பின்னர் தாங்கள் பிரித்தானியாவில் தங்கமுடியும் என்பதையும்,யாரும் தடுக்க முடியாது என்பதினை தெரிந்தே பிரித்தானியாவுக்கு வருகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உலக பேரழிவுக்கான போரை நடத்தும் ரஷ்யா: உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றச்சாட்டு



உலக பேரழிவுக்கான போரை ரஷ்யா நடத்திவருகிறது என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார்.

இஸ்மாயில் துறைமுகம் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலால் ஏற்றுமதிக்கு தயாராகவிருந்த உக்ரைனின் 40 ஆயிரம் தொன் தானியங்கள் சேதமடைந்தன. இதன் காரணமாக ஆப்பிரிக்க நாடுகளில் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இதனை சுட்டிக்காட்டி காணொளி வெளியிட்டுள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, சர்வதேச உணவு சந்தையில் பொருட்களின் விலை உயர்ந்து, உணவு விநியோகம் பாதிக்கப்பட வேண்டும் என்பதே ரஷ்யாவின் விருப்பம் என்று கூறியுள்ளார்.

மேலும் உக்ரைனுடனான கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை புதுப்பிக்க ரஷ்யா மறுத்துவிட்டதால், உக்ரைனில் உள்ள தானிய கிடங்குகளில் லட்சக்கணக்கான தொன் தானியங்களை ஏற்றுமதி செய்ய முடியாமல் தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ட்ரம்ப் விடுதலை!




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பெறுபேற்றினை மாற்றியமைப்பதற்கான தமது முயற்சிகள் தொடர்பான 4 குற்றவியல் வழக்குகளில் இருந்து குற்றமற்றவராக கருதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

வொஷிங்டன் டிசி நீதிமன்றில் அவர் மீதான வழக்கு விசாரணை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கின் சாட்சியாகத் தொடர்புடைய எவருடனும் சட்ட ரீதியாக தொடர்பு கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுவிக்கப்பட்டுள்ளார் என ர்வதேச ஊடகங்கங்கள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய டொனால்ட் ட்ரம்ப், அவர் மீது சுமத் தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும், ஒரு அரசியல் எதிரியை துன்புறுத்துவதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் ஒருபோதும் இவ்வாறான செயற்பாடுகள் நடக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949